### தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

### தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

### தஞ்சாவூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(20.05.2023 முதல் 24.05.2023)

**அறிக்கைஎண்: 40/2023** **தேதி: 19.05.2023**

**தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 39 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 29 °செ ஆகவும் பதிவானது.

**தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (20.05.2023 முதல் 24.05.2023).**

| கடந்தவாரவானிலை (16.05.2023 முதல் 18.05.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (20.05.2023 முதல் 24.05.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 16/05 | நாள்-2 17/05 | நாள்-3 18/05 | தேதி | நாள்-1 20/05 | நாள்-2 21/05 | நாள்-3 22/05 | நாள்-4 23/05 | நாள்-5 24/05 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 2 | 0 | 0 |
| 39 | 39 | 39 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 38 | 38 | 39 | 39 | 39 |
| 28 | 28 | 29 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 27 | 28 | 28 |
| 4 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 2 | 2 | 4 | 2 | 3 |
| 72-56 | 70-62 | 70-61 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-45 | 70-45 | 70-45 | 70-45 | 70-45 |
| 4 | 4 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தெற்கு | தெற்கு | தென் தென் மேற்கு |

**தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் பெருபாலும் தெளிவாக காணப்படும். 22.05.2023 அன்று குறைந்த அளவு தூரல் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 38 – 39 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 7 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 45 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு, பயிர்களுக்கு அதிக அளவு தண்ணீர் பாய்ச்சவும். |
| நெல் | நாற்றாங்கால் | குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 மற்றும் ஆடுதுறை 47 விதைகளை தேர்ந்தெடுக்கவும் |
| நெல் | நாற்றாங்கால் | கார்பென்டாசிம் மருந்து 1 கிலோ விதைக்கு 2 கிராம் அல்லது சூடோமோனாஸ் பாக்டீரியா 10 கிராம் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகள் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்த முடியும். |
| நெல் | நாற்றாங்கால் | தற்ப்போது நிலவும் வானிலையின் காரணமாக நெல் நாற்றாங்காலில் இலைபேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷம் 25 % WG 100 கிராம் /எக்டர் அல்லது டைமித்யோட் 1.5 மி.லி/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| தென்னை | அணைத்து நிலைகள் | ருக்கோஸ் ஸ்பைரலிங் வெள்ளைப்பூச்சி காணப்படுகிறது. ஏண்கார்சியா ஒட்டுண்ணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தண்ணீர், மைதா கரைசலை தெளிப்பாக இடுதல் மற்றும் மஞ்சள் குச்சி பொறி வைக்கவும் |
| கால்நடைகளுக்கு | மாடு | வெப்பநிலை அதிகரிப்பதால் கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்ப தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம். |
| | | காற்றின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்கும் போது கறைவை மாடுகளின் தண்ணீர் குடிக்கும் அளவு அதிகமாவதோடு உலர் பொருள் உட்கொள்ளும் அளவு குறையும். இதனால் பால் உற்பத்தி குறைய தொடங்கும். ஏனவே பசுந்தீவனத்துடன் புரதசத்துள்ள பசுந்தீவனங்களை கொடுக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு, பயிர்களுக்கு அதிக அளவு தண்ணீர் பாய்ச்சவும்.

**இயக்குநர்**